செ.வெ.எண்: 40 நாள்: 30.06.2020

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், மல்லூர் கிராமத்தில் வேளாண்மைத்துறையின் மூலம் நுண்ணீர் பாசனத்திட்டத்தின்கீழ் விவசாய நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு தோட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரி நுண்ணீர் பாசனத்திட்டத்தின்கீழ் கரும்பு பயிருக்கு சொட்டுநீர் அமைக்க 390 எக்டர் இலக்கீடு பெறப்பட்டு 173 எக்டர் சாதனை அடையப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி சிறு குறு விவசாயிகள் ஒன்று முதல் 5 ஏக்கர் வரை 100 சதவித மானியத்திலும், இதர விவசாயிகள் 12.5 ஏக்கர் வரை 75 சதவித மானியத்திலும் சொட்டுநீர் பாசனம் அமைத்து பயன்பெறலாம்.

மல்லூர் கிராமத்தைச்சேர்ந்த விவசாயி திரு.இளங்கோவன் த/பெ.ஜெகநாதன் அவர்கள் வயலில் 1.90 எக்டர் பரப்பில் ரூ.2,52,070 மானியத்தில் அமைக்கபட்ட நுண்ணீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ளதையும், நுண்ணீர் பாசனம் அமைத்தற்காக ரூ.17,356 மானியத்தில் வழங்கப்பட்ட கரும்பு விதைப்பரு நாற்றுகள் நடவு செய்த வயலை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு அதன் பயன்கள் குறித்து விவசாயிடம் கேட்டறிந்தார்கள். மேலும், வேளாண்மைத்துறை மூலம் மானியத்தில் உள்ள திட்டங்களை விவசாயிகள் பயன்பெறும் வகையில் வழங்கி, விவசாயம் பெருக செயல்பட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, வேளாண்மை இணை இயக்குநர் இரா.பழனிசாமி, உதவி இயக்குநர் இரா.லதா, கோத்தாரி சர்க்கரை ஆலை முதுநிலை மேலாளர் ரவிகுமார், வேளாண்மை அலுவலர் ஆ.சாந்தி, துணை வேளாண்மை அலுவலர் பால்ஜான்சன், வேளாண்மை அலுவலர் (மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர்) ரமேஷ்குமார் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் க.ராதா, சு.மகேந்திரன் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**